ORIGINAL ARTICLE

# மாத்தளை கல்வி வலய முஸ்லிம் ஆண் மாணவர்கள் உயர்கல்வியில் பங்குபற்றுதல் - ஓர் ஆய்வு

# [MAATTALAI KALVI VALAYA MUSLIM AAN MAANAVARKAL UYARKALVIYIL PANGKU PADRUTAL – OOR AAIYU]

# PARTICIPATION OF MUSLIM MALE STUDENTS OF MATALE EDUCATION ZONE IN HIGHER EDUCATION

**எம்.ஆர்.எப்.பரீதா [1] / M.R.F. Fareedha[1]**
**பரீட் முகமட் நவாஸ்தீன் [2] / Fareed Mohamed Nawastheen [2]**

[1] இலங்கை ஆசிரியர் சேவை, சாஹிரா கல்லூரி, மாத்தளை, இலங்கை / Sri Lanka Teacher Service, Zahira College, Matale, Sri Lanka. மின்னஞ்சல் / Email: razikfaree@gmail.com

[2] சிரேஸ்ட விரிவுரையாளர், கல்விப் பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், இலங்கை / Senior Lecturer, Faculty of Education, The Open University of Sri Lanka.
மின்னஞ்சல் / Email: fmnaw@ou.ac.lk

DOI: https://doi.org/10.33306/mjssh/61

**ஆய்வுச் சாரம்**

உயர்கல்வியிலான பங்குபற்றுகையானது, எந்தவொரு சமூகத்தினதும் அபிவிருத்திக்கும் மிக முக்கியமானதாகும். உயர்கல்வியிலான பங்குபற்றுகை, ஏனைய சமூகங்களிலும் பார்க்க முஸ்லிம் சமூகத்தில், குறிப்பாக ஆண் மாணவர்களில் குறைவாக இருப்பதாகக் கூறப்படுகின்றது. பல்கலைக்கழக அனுமதியிலும், ஆண் மாணவர்களின் எண்ணிக்கை மாணவிகளின் தொகையினைவிட குறைவாக இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, இந்த ஆய்வின் பிரதான நோக்கமானது, மாத்தளை கல்வி வலய முஸ்லிம் ஆண் மாணவர்களின் உயர்கல்வியிலான பங்குபற்றல் எவ்வாறுள்ளது எனக் கண்டறிவதாகும். இந்நோக்கத்தை அடையும் பொருட்டு, பின்வரும் இரு குறிக்கோள்கள் அமைக்கப்பட்டன: மாத்தளை கல்விவலய முஸ்லிம் ஆண் மாணவர்களின் உயர்கல்வியிலான பங்குபற்றல் நிலைமையினை கண்டறிதல், உயர்கல்வியில் பங்குபற்றல் தொடர்பாக மாத்தளை கல்விவலய முஸ்லிம் ஆண் மாணவர்களிடம் காணப்படும் புலக்காட்சியினை கண்டறிதல் என்பனவாகும். இவ்வாய்வுக்கான மாதிரி, இக்கல்வி வலயத்தில் முஸ்லிம் ஆண் மாணவர்கள் கல்வி கற்கும் நான்கு பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்டது. சுமார் 552 மாணவர்களில் இருந்து 56 மாணவர்களும், 49

ஆசிரியர்களிலிருந்து 28 ஆசிரியர்களும் 29 பெற்றோர்களும் மாதிரிகளாகக் தெரிவு செய்யப்பட்டனர். வினாக்கொத்து, நேர்காணல் படிவங்கள் கொண்டு தரவுகள் திரட்டப்பட்டதுடன், நூற்றுவீதம், விவரண புள்ளியல் நுட்பங்கள் கொண்டு தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இவ்வாய்வில் உயர்கல்வியிலான பங்குபற்றல் எண்ணிக்கையில் முஸ்லிம் ஆண் மாணவர்களில் வீழ்ச்சி காணப்பட்டதைக் கண்டறிய முடிந்தது. மேலும், சுமார் 63% ஆண் மாணவர்கள் தமது உயர்தர கற்கையினை முடித்தவுடன், உயர்கல்வியில் ஈடுபடாமல், தொழிலில் ஈடுபட ஆர்வம் காட்டியிருந்தனர். மூன்றாம் நிலைக் கல்வி தொடர்பாக குறைவான விழிப்புணர்வு இவர்களிடம் காணப்படுவதும், உயர்கல்வியில் ஆண் மாணவர்களின் குறைவான பங்குபற்றலுக்குக் காரணமாக இருக்கின்றது. எனவே, மூன்றாம் நிலைக் கல்வியில் காணப்படும் வாய்ப்புக்கள் தொடர்பாக விழிப்புணர்வை இம்மாணவர்களில் ஏற்படுத்தும் போது உயர்கல்வியில் ஆண் மாணவர்களின் பங்குபற்றலை அதிகரிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**கருச்சொற்கள் :** உயர்கல்வி, பங்குபற்றல், மாத்தளை, முஸ்லிம் ஆண் மாணவர்கள்

## Abstract

Participation in higher education is a significant indicator of development of a society. It is continuously reported that the level of participation of the Muslim community in higher education, especially among male students, is lower than that in other communities in Sri Lanka. A comparison of the involvement of the Muslim community in Sri Lankan university education based on gender shows that male students' university entrance rate is lower than that of female students. The main purpose of this study was to explore the level of Muslim male students' participation in higher education. To achieve this purpose, the following objectives were formulated: to identify the status of Muslim male students' participation in higher education, to examine the perception of Muslim male students on pursuing higher education and to find out the reasons for their low level of participation. The study was conducted as a survey and data were analyzed quantitatively. The sample for the study was selected from the Advanced Level classes of four schools in Matale Education Zone. A total of 56 out 552 students, 28 out of 49 teachers and 29 parents from these four schools were selected as the sample. It was found that willingness to participate in higher education among male students was at a minimal level. About 63% of male students in Advance Level classes wanted to complete their studies and seek job opportunities after their Advanced Level Examination instead of engaging in tertiary education. It was also found that there was a lack of awareness about the opportunities for tertiary education among these students. Therefore, it is suggested that conducting awareness programs on the importance of and avenues available to participate in tertiary education to the students would help to increase Muslim male student participation in higher education.

**Keywords:** Higher Education, Muslim Male Students, Matale, Participation

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 5th January 2020, revised 28th January 2020, accepted 6th February 2020

**முன்னுரை**

எந்தவொரு சமூகத்தினது அபிவிருத்தி அதன் கல்வியில் பங்குபற்றும் நிலைமையில் தங்கியுள்ளது. குறிப்பாக உயர்கல்வியில் காணப்படும் பங்குபற்றல் நிலைமைகள் அச்சமூகத்தின் அபிவிருதிக்கு பங்களிப்பு செய்கிறது என சைபுதீன் மற்றும் ஹஸ்புல்லாஹ் (2000)[1] என்போர் சுட்டிக்காட்டுகின்றனர். இலங்கையில் கல்வியில் பின்தங்கியுள்ள சமூகங்களில் முஸ்லிம் சமூகமும் ஒன்றாகும். குறிப்பாக முஸ்லிம் சமூகத்தின் எழுத்தறிவு வீதமானது ஏனைய சமூகங்களிலும் பார்க்க குறைவாக உள்ளது (நிஸா மற்றும் ஹஸ்புல்லாஹ், 2000)[2]. தற்போதைய கல்விமுறையானது, முன்பள்ளி, ஆரம்பக்கல்வி, கனிஸ்ட இடைநிலைக் கல்வி, மேல் இடைநிலைக்கல்வி, கல்லூரிக் கல்வி, மூன்றாம் நிலைக் கல்வி என ஆறு கட்டங்களைக் கொண்டதாகும் (Nawastheen, 2019)[3]. இலங்கையின் கல்வி முறையின்படி, பாடசாலையில், கல்லூரிக் கல்வியாகக் கருதப்படும் க.பொ.த. உயர்தரப்பிரிவில் தரம் 12 மற்றும் தரம் 13 களில் கற்று க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கள் உயர்கல்விக்காக அல்லது மூன்றாம் நிலைக் கல்வியில் இணைத்துக் கொள்ளப்படுவர். போட்டிப் பரீட்சையாகவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் மிகச்சிறந்த பெறுபேறுகளை பெற்ற குறிப்பிட்ட சிறு தொகை மாணவர்கள் மட்டுமே உயர்கல்விக்காக அனுமதிக்கப்படுவர். இங்கு உயர்கல்வி என்பது பல்கலைக்கழகங்கள் மற்றும் பல்கழைக்கழக சட்டத்தின் கீழ் உள்ள உயர்கல்வி நிறுவனங்களில் வழங்கப்படும் கல்வி என்றே கருதப்படுகிறது. உயர்கல்விக்கு முஸ்லிம் ஆண் மாணவர்களின் பிரவேசம் குறைவாக உள்ளது. பொதுவாகஇ இலங்கையில் ஆண் மாணவர்களின் கல்வி நிலை மாணவிகளின் கல்வி நிலைகளோடு ஒப்பீட்டு நோக்கும் போது படிப்படியாக வீழ்ச்சியடைந்து வருகின்றது. பாடசாலையை விட்டு இடைவிலகுவோரிலும் ஆண் மாணவர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் அதிகமாக உள்ளது. 'ஒவ்வொரு வருடமும், உயர்கல்வியில் பங்குபெறும் மாணவர்களின் எண்ணிக்கை நாட்டில் அதிகரித்தே வந்துள்ளது. அண்மைக்காலங்களில், பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெரும் மாணவர்களில் ஆண் மாணவர்களின் எண்ணிக்கை பெண் மாணவர்களின் அளவினை விட குறைவாக உள்ளது. இலங்கையின் உயர்கல்வி பங்குபற்றலில் பால்நிலைரீதியான தெளிவான ஏற்றத்தாழ்வினை கொண்டுள்ளது (Ahamedlebbe, 2011)[4].

இலங்கையின் கல்விப்புலத்தில் முஸ்லிம் ஆண் மாணவர்களின் உயர்கல்வி தொடர்கை, ஒப்பீட்டு ரீதியில் கடந்த 10 வருடங்களாகப் படிப்படியாக வீழ்ச்சியடைந்து வருவதைப் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. இலங்கை முஸ்லிம்களின் பல்கலைக்கழக நுழைவு விகிதம் கிட்டத்தட்ட 3% ஆகும். இது இலங்கை முஸ்லிம் சனத்தொகை விகிதாசாரத்தின்; அளவை விட மிகக் குறைவானதாகும் என்பது வெளிப்படையானதாகும். அதிலும் குறிப்பாக மாணவிகளின் பல்கலைக்கழக பிரவேசத்தினை விட ஆண் மாணவர்களின் பல்கலைக்கழக நுழைவு என்பது ஒப்பீட்டு ரீதியில் குறைவாக உள்ளது. இலங்கையின் பெரும்பாலான மாவட்டங்களில் இந்நிலைமை பரந்து காணப்படுகின்றது. இவற்றின் அடிப்படையில் நோக்குகின்றபோது ஆண் மாணவர்களின் உயர் கல்வி நிலை குறித்த ஆய்வுகள் நாடுதழுவிய ரீதியில் அவசியப்படுவதை யாரும் மறுப்பதற்கில்லை. 2015-2018 வரையான க.பொ.த உயர்தர பெறுபேறுகள் மற்றும் உயர்கல்விப் பிரவேச விபரம் தொடர்பாக ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பாடசாலைகளில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகளின்படி மாத்தளை கல்வி வலயத்தைப் பொறுத்தவரை முஸ்லிம் ஆண் மாணவர்களின் உயர்கல்விப் பிரவேசம் குறைவாக உள்ளதை உறுதி செய்வதாக உள்ளது. 2017 ஆம் ஆண்டின் பல்கலைக்கழக மற்றும் பல்கலைக்கழக சட்டத்திற்குட்பட்ட உயர்கல்வி நிறுவனங்களுக்குத் தகைமை பெற்ற 60.99% மாணவர்களில், 19.10%-மானோர் பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கப்பட்டனர். அவர்களுள் 18.5% பெண்களாவர் என்பதை

இறுதியாக வெளியிடப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் புள்ளிவபரம் காட்டுகின்றது. பொதுவான இந்நிலைமையுடன் ஒப்பிடுகையில், முஸ்லிம்களின் அதிலும் குறிப்பாக ஆண் மாணவர்களின் உயர்கல்வி பங்குபற்றுகை மிகவும் குறைந்த நிலையில் காணப்படுகின்றது. இவ்வாறு முஸ்லிம் ஆண் மாணவர்களின் உயர்கல்விப் பிரவேசம் குறைவடைந்து வருவது இலங்கை முஸ்லிம்களின் கல்வித்துறை வரலாற்றின் கசப்பான உண்மைகளாகும்.

இந்நிலையில், அம்பாறை மாவட்டம் மற்றும் கொழும்பு மாவட்டம் ஆகிய பகுதிகளில் முஸ்லிம்களின் கல்வி நிலை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில், கல்வித்துறை வீழ்ச்சி அபாயகரமான நிலைமைகளில் இருப்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. முஸ்லிம் ஆண் மாணவர்களின் உயர்கல்வி பங்குபற்றுகையின் தற்போதைய நிலைமை மற்றும் அவற்றுக்கான காரணங்களை ஆய்வு செய்வது, இத்தகையதொரு சூழ்நிலையில் மிகவும் வேண்டப்படும் விடயமாகும். மாத்தளை மாவட்டத்திலும் இந்நிலைமை தீவிரமாக உள்ளது. இதற்கான காரணங்களைக் கண்டறிவது அவசியமாகவுள்ளது. இதனால் மாத்தளை கல்வி வலயத்தை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு நடைபெறுகின்றது. 6 பாடசாலைகளில் உயர்தரம் கற்பிக்கப்பட்டாலும், 1 பெண்கள் பாடசாலையை விடுத்து 5 பாடசாலைகளில் 4 பாடசாலைகள் ஆய்வு மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது கற்கும் (2019/2020) மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், 4 பாடசாலை அதிபர்கள் என மொத்தமாக 117 பேர் ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர். இவ்வாய்வின் மூலம், முஸ்லிம் ஆண் மாணவர்களின் உயர் கல்வி பங்குபற்றுகை தொடர்பான மனநிலையினை அறிந்துகொள்வதாலும், ஆண் மாணவர்களின் உயர் கல்வி பங்குபற்றுகை குறைவடைந்திருப்பதற்கான காரணங்களைக் கண்டறிவதன் மூலமும் கல்வித்துறையுடன் தொடர்புடைய பலரும் இது தொடர்பான முன்னெடுப்புக்களை நடைமுறைப்படுத்து வாய்ப்புக் கிடைக்கின்றது. முஸ்லிம் ஆண் மாணவர்களின் உயர்கல்வி பங்குபற்றுகை குறைவடைந்து செல்வதற்கான காரணங்களைக் கண்டறிவதன் ஊடாகச் சமுகத்தின் பல தரப்பினரும் நன்மைகளை அடைந்து கொள்வர். பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் உள்ளடங்கலாக கல்வித்துறை சார்ந்தவர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் சமூக சேவைகளில் ஈடுபடுவோர், ஆய்வாளர்கள் என பல்வேறு தரப்பினரும் இதிலிருந்து பயனடைவர். குறிப்பாக ஆய்வாளருக்கும் ஆய்வுத்துறையில் தேர்ச்சி ஏற்படுவதற்கு இது ஒரு வாய்ப்பாக உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஆய்வின் பிரதான நோக்கமும் குறிக்கோள்களும்

மாத்தளை கல்வி வலயத்தில், முஸ்லிம் பாடசாலைகளில் கற்கும் முஸ்லிம் ஆண் மாணவர்களின் உயர்கல்வி பங்குபற்றல் நிலையினைக் கண்டறிவதே ஆய்வின் பிரதான நோக்கமாகும். இந்நோக்கத்தை அடைந்துகொள்ள பின்வரும் குறிக்கோள்கள் உருவாக்கப்பட்டன.

1. உயர்கல்வி பங்குபற்றுதல் தொடர்பாக மாணவர்களின் புலக்காட்சியினை அறிதல்
2. உயர்கல்வி பங்குபற்றல் குறைவாக இருப்பதற்கான காரணங்களைக் கண்டறிதல் என்பன இவ்வாய்வின் குறிக்கோள்களாகும்.

**இலக்கிய மீளாய்வு**

உயர்கல்வியில் பங்குபற்றல் என்பதானது, தனிநபர்களைப் பற்றியது மட்டுமன்றி, அதனால் ஏற்படும் பதவி நிலைமைகள், சமூக குழுக்களுக்கு இடையிலான உறவுகள் மற்றும் இடைவெளிகள் பற்றியதும் ஆகும் என Morley and Lussier (2009)[5] கூறுகின்றனர். மேலும், உயர்கல்வியில் பங்குபற்றலை விரிவுபடுத்தும் நோக்கில் அரசுகள் சிறந்த கொள்கைகளைக் கொண்டிருந்த போதிலும், பால் நிலை வேறுபாடுகள், சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அதனை பாதிக்கின்றன (Morley & Lussier 2009)[5]. ஆண் மாணவர்களின் உயர்கல்வி பங்குபற்றுகை குறைவடைந்து செல்வதன் உண்மைத்தன்மையும், அதற்கான காரணங்களும் பல்வேறு உள்நாட்டு மற்றும் சர்வதேச ஆய்வுகளின் ஊடாகக் கண்டறியப்பட்டுள்ளன. இலங்கையில் முஸ்லிம் மாணவர்களின் கல்விப் பங்குபற்றல் தொடர்பாக ஒரு சில ஆய்வுகள் இடம்பெற்றுள்ளன. அவை குறிப்பாக முஸ்லிம் பெண் மாணவிகளின் கல்விப் பங்குபற்றல் தொடர்பாகவே அதிகம் கவனம் செலுத்தியுள்ளன. உதாரணமாக நோக்குவோமாயின் நிஸா மற்றும் ஹஸ்புல்லாஹ் (2000)[2] ஆகியோரின் ஆய்வு முஸ்லிம் பெண்களின் கல்வி அபிவிருத்தியை வரலாற்று, பிரதேச, பொருளாதார சமூக அடிப்படைகளில் ஆராய்ந்துள்ளது. சுல்பிகா (2000)[6] என்பவர் முஸ்லிம் பெண்களின் உயர்கல்வி நிலை எனும் தனது ஆய்வில், மூன்றாம் நிலைக்கல்வியில் முஸ்லிம் பெண்களின் பங்குபற்றல் தொடர்பாக ஆராய்ந்துள்ளார். இவ்வாறே மும்தாஜ் மற்றும் ஹாசிம் ஆகியோர் (2000) மாவனல்லை பிரதேசத்தின் தும்புளுவாவ கிராமத்தில் உள்ள முஸ்லிம் மாணவிகள் தமது கல்வியை இடைநிறுத்துவதற்கான காரணிகள் பற்றி நோக்கியுள்ளனர். சைபுதீன் மற்றும் ஹஸ்புல்லாஹ் (2000)[1] ஆகியோரின்படி, மொத்த முஸ்லிம் மாணவர்களின் தொகையில் 55%-மானோர் ஆரம்பக் கல்வியில் பங்குபற்றிய போதிலும் கல்லூரிநிலைக் கல்வியின் போதான அவர்களின் பங்குபற்றல் மூன்று வீதத்தினால் குறைவடைந்து இருந்ததாகச் சுட்டிக்காட்டுகின்றனர். உயர்கல்வியில் முஸ்லிம் மாணவர்களின் பங்குபற்றல் குறைவாகவே காணப்படுகிறது என கருணாநிதி (2000)[7] யும் சுட்டிக்காட்டுகின்றார். மேலும், சந்திரசேகரம் (2000)[8] முஸ்லிம் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி 1980/81 களில் 3.9% ஆகக் காணப்பட்ட நிலைமை, 1987/88 களில் 8.9% ஆக அதிகரித்தும், 1988/89 களில் 7.3% ஆகவும் 1989/90 களில் 7.1% ஆகக் காணப்பட்டதாகக் குறிப்பிடுகின்றார். உயர்கல்வி கற்பதில், பால் சமத்துவமின்மை காணப்படுகின்றது. உயர்கல்வி அடைவுகளில் பால் வேறுபாடுகளின் அடிப்படையில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுவதற்கான காரணம் தனிநபர்களின் மனப்பாங்குகளாகும் (Riaz, Pervaiz, & Aleem, 2015)[9]. முஸ்லிம்களின் கல்விப் பின்னடைவு சமூகத்தைப் பலவீனப்படுத்தும் காரணிகளில் ஒன்றாக இருப்பதை மறுக்க முடியாது (ரவுப் செய்ன், 2016)[10]. அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் கல்விப் பின்னடைவு அண்மைகாலமாக அதிகரித்து வருகிறது (Jalaldeen, 2011)[11]. உயர்கல்வி அனுபவங்களைப் பெறுவதில் பால் வேறுபாடுகள் தாக்கம் செலுத்துவது உண்மையாகும் (John, Richardson & King, 2010)[12]. Richardson, Mittelmeier and Rienties (2020)[13] ஆகியோர் ஐக்கிய இராச்சிய உயர்கல்வியின் பங்குபற்றல் மற்றும் கல்விசார் அடைவுகளில் பால்நிலை, சமூக வகுப்பு மற்றும் இனரீதியான அம்சங்களின் வகிபங்கு - ஓர் இற்றைப்படுத்தல் எனும் தமது ஆய்வில் ஐக்கிய இராச்சியத்தில் கல்வியில் குறிப்பாக உயர்கல்வியில் ஆண், பெண் மாணவர்களிடையே இடைவெளி காணப்படுவதாக எடுத்துக்காட்டுகின்றனர். Crawford and Greaves (2015)[14] ஆகியோர் 2003 மற்றும் 2008 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் உயர் கல்வியில் பெண்கள் மற்றும் ஆண் மாணவர்களின் பங்குபற்றல் வேறுபாடு எட்டு வீதமளவில் இருந்ததாகவும் இந்த ஏற்றத்தாழ்வு தற்போது மேலும் அதிகரித்திருக்கலாம் என Richardson *et al.,*(2020)[13] சுட்டிக்காட்டுகின்றனர். மேலும், ஆண் மாணவர்கள் பெண் மாணவிகளைவிட பரீட்சைகளில் குறைவான மதிப்பெண்களைப் பெறுகின்ற போது உயர்கல்வியில் உள்ள அக்கறையினை

குறைவாகக் காட்டுவதாகக் கூறுகின்றனர். அதேபோன்று, Abdulla and Ridge (2011)[15] ஆகியோர் ஐக்கிய அரபு இராச்சியத்தின் உயர்கல்வி பங்குபற்றலில், பால் நிலை அடிப்படையிலான வேறுபாடுகள் பற்றி கவனம் செலுத்தி இருந்தனர். கல்விக்கும் அதனால் கிடைக்கும் நன்மைகள் பற்றிய அறிவின்மை, சமூக மற்றும் கல்வியில் காணப்படும் படிமுறையாக்கம், குறைவானகல்வி அடைவுகள் என்பன உயர் கல்வியில் அரபு ஆண் மாணவர்கள் அதிக அக்கறையின்மைக்குக் காரணங்களாகச் சுட்டி கட்டுகின்றனர். மாணவர்கள் உயர்கல்வியை விரும்பாமல் இருப்பதற்கான காரணிகளுள் கல்விமுறையின் பொருத்தப்பாடு குறைவாக இருப்பதும் சுடடிக்காட்டப்பட்டுள்ளது. பொதுவாக, எமது பாடசாலைகளில் தரம் 1 முதல் 13 வரைக் கற்கும் மாணவர்களில் 96 வீதமானவர்கள் சமூக, பொருளாதாரத் தளங்களுக்குப் பொருத்தமானவர்களாக உருவாக்கப்படுவதில்லை எனலாம்.

## ஆய்வு முறையியல்

இவ்வாய்வு அளவீட்டு ஆய்வு வடிவத்தில் தொகை சார் அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்டது. மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள, மாத்தளை மாவட்டத்தில் உள்ளடங்கும் மாத்தளை கல்வி வலயத்திலேயே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வலயத்தில் உள்ள 12 முஸ்லிம் பாடசாலைகளில், 06 பாடசாலைகளில் க.பொ.த உயர்தரம் கற்பிக்கப்படுகின்றது. அவற்றுள் ஒன்று பெண்கள் பாடசாலையாகும். எனவே முஸ்லிம் ஆண் மாணவர்கள் கற்கும் ஐந்து பாடசாலைகளில் நான்கு பாடசாலைகள் ஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்டன. அவை மாத்தளை வலயத்தைச் சேர்ந்த நான்கு கோட்டங்களில், க.பொ.த உயர்தரம் கற்பிக்கப்படும் பாடசாலை எதுவும் இடம்பெறாத ஒரு கோட்டத்தைத் தவிர்த்து, கோட்ட அடிப்படையில் ஒவ்வொரு பாடசாலையும், 3 பாடசாலைகளைக் கொண்ட ஒரு கோட்டத்தில் இருந்து 2 பாடசாலைகளும் என்ற அடிப்படையில் மொத்தமாக நான்கு பாடசாலைகள் ஆய்வு மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டன. எளிய எழுமாற்று முறை மாதிரியெடுத்தல் முறையை அடிப்படையாகக் கொண்டே ஆய்வு மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டன. அந்த வகையில், ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு முகம் கொடுக்கவுள்ள மாணவர்களில் 10%, தற்போது இப்பிரிவில் கற்பிக்கும் ஆசிரியர்களில் 50%, ஆய்வுக்குட்படுத்தப்படும் மாணவர்களின் பெற்றோர்களில் 5%, பாடசாலைக்கு ஒருவர் விகிதம் பாடசாலையின் அதிபர்/பிரதி அதிபர் என நால்வரும் ஆய்வின் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மொத்தமாக 117 பேர் ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர்.

ஆய்வுக்கான மாதிரி தெரிவினை அட்டவணை 1 காட்டுகின்றது.

அட்டவணை 1
*தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளின் விபரம்*

| பாடசாலை | மொத்த மாணவர்கள்; | தெரிவு செய்யப்பட்ட (10%)மாதிரி- எண்ணிக்கையில் | மொத்த ஆசிரியர்கள் | மொத்த ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்ட மாதிரி (50%)- எண்ணிக்கை; | மொத்த பெற்றோர் | தெரிவு செய்யப்பட்ட மாதிரி (5%)- எண்ணிக்கையில் |
|---|---|---|---|---|---|---|
| ஸாஹிராக் கல்லூரி | 195 | 20 | 18 | 09 | 195 | 10 |
| அஜ்மீர் தேசிய பாடசாலை | 310 | 31 | 23 | 12 | 310 | 16 |
| மின்ஹாஜ் மகா வித்தியாலயம் | 40 | 04 | 08 | 04 | 40 | 02 |
| அந்நூர் மகா வித்தியாலயம் | 07 | 01 | 05 | 03 | 07 | 01 |
| மொத்த மாதிரிகள் | 552 | **56** | 49 | **28** | 552 | **29** |

மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களுக்காகத் தனித்தனி வினாக்கொத்துக்கள் தயாரிக்கப்பட்டுத் தரவுகள் திரட்டப்பட்டன. அதிபர்களிடம் நேர்காணல் படிவம் கொண்டு தரவுகள் பெற்றுக் கொள்ளப்பப்ட்டன. திரட்டப்பட்ட தரவுகள் நூற்றுவீதம் கொண்டு பகுப்பாய்வு செய்யப்பட்டன.

**தரவுப் பகுப்பாய்வு**

மாணவர்களின் உயர்கல்வி பங்குபற்றுகை தொடர்பான தரவுகளைப் பின்வருமாறு நோக்கலாம்.

அட்டவணை 2
*உயர்கல்விக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விபரம் (பாடசாலை ரீதியாக-2015-2018 வரை)*

| பாடசாலை | உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | உயர்கல்விக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | உயர்கல்விக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் வீதம் |
|---|---|---|---|
| அந்நூர் மகா வித்தியாலயம | 17 | 00 | 0% |
| மின்ஹாஜ் மகா வித்தியாலயம் | 84 | 01 | 1.19% |

| | | | |
|---|---|---|---|
| ஸாஹிராக் கல்லூரி; | 356 | 25 | 7.0% |
| அஜ்மீர் தேசிய பாடசாலை | 382 | 28 | 7.3% |
| மொத்தம் | 839 | 54 | சராசரி-6.4% |

அட்டவணையின் படி மேலுள்ள நான்கு பாடசாலைகளில் 2015 முதல் 2018 வரையான காலப்பகுதியில், க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில், உயர்கல்விக்குத் தெரிவான மாணவர்களின் எண்ணிக்கையை அட்டவணை 2 காட்டுகின்றது. உயர்கல்விக்குத் தெரிவான மாணவர்களின் எண்ணிக்கை (அட்டவணையில் உள்ள பாடசாலை ஒழுங்கில்) முறையே 0%, 1.19%, 7.0%, 7.3% ஆகும். இதன்படி கடந்த 4 வருடங்களில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 6.4% மட்டுமே உயர்கல்விக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். அடுத்து, உயர்கல்வி தொடர்பான மாணவர்களின் மனப்பாங்கினை அறிவதற்காக, ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட மாணவர்களில் க.பொ.த உயர்தரத்தில் (கலை, வர்த்தகம், உயிரியல் விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம், தொழில்நுட்பத்துறை என) 5 துறைகளைச் சார்ந்தவர்களும் உள்ளடக்கப்பட்டிருந்தனர். உயர்கல்வியைத் தொடர்வது தொடர்பில் மாணவர்களின் புலக்காட்சியினை நோக்கும்போது வினாக்கொத்துக்களில் வழங்கப்பட்ட அவர்களது பதில் பின்வருமாறு அமைந்திருந்தன.

அட்டவணை 3

*உயர்கல்வியைத் தொடர்வது தொடர்பில் மாணவர்களின் புலக்காட்சி*

| விடயம் | ஆம் எனப் பதிலளித்தோர்(%) | இல்லை எனப் பதிலளித்தோர்(%) |
|---|---|---|
| உயர்தரம் கற்பதிலும், எதிர்காலத்தில் உயர்கல்வியைத் தொடரவும் ஆர்வமான நிலை காணப்படுதல் | 32 | 68 |
| உயர் கல்வி தொடர்வதால் சிறந்த எதிர்காலத்தை அடையலாம் எனும் நேர்மனப்பாங்கு காணப்படுதல் | 22 | 78 |
| உயர்கல்விக்கு தான் தெரிவு செய்யப்படுவது தொடர்பில் தன்னம்பிக்கை காணப்படுதல் | 35 | 65 |
| உயர்தரப் பரீட்சை எழுதிய பின்னர், உழைப்பில் ஈடுபட வேண்டும் என்ற மனநிலை காணப்படுதல் | 62 | 38 |

மாணவர்களில் 32% ஆனோர் மாத்திரமே உயர்தரம் கற்பதிலும், எதிர்காலத்தில் உயர்கல்வியைத் தொடரவும் ஆர்வமான நிலையில் உள்ளனர். உயர் கல்வி கற்பதால் சிறந்த எதிர்காலத்தை அடையலாம் எனும் நேர்மனப்பாங்கு 22% மான மாணவர்களிடத்தில் காணப்படுகின்றது. உயர்தரம் கற்பது, உயர்கல்வியைத் தொடர்வது என்பனவற்றில் 68% மானோர் ஆர்வமற்ற நிலையில் இருப்பதுடன், உயர்கல்வியைத் தொடர்வது தொடர்பில் 78% மான மாணவர்கள் எதிர்மறையான கருத்துக்களையே வெளிப்படுத்தியுள்ளனர். அத்துடன் அட்டவணை 3 இன்படி,

உயர்கல்விக்கு தான் தெரிவு செய்யப்படுவது தொடர்பில் 65% மான மாணவர்கள் தன்னம்பிக்கை அற்றவர்களாக உள்ளனர். 63% மானோர் உயர்தரப் பரீட்சை எழுதிய பின்னர், உழைப்பில் ஈடுபட வேண்டும் என்ற மனநிலையில் உள்ளனர். அத்துடன் வினாக்கொத்தின் இறுதியில் வழங்கப்பட்ட திறந்த வினாவுக்கு சில கற்கை நெறிகளை குறுகிய காலத்தில் நிறைவு செய்தால் வெளிநாடுகளுக்குச் சென்று நிறைய சம்பாதிக்கலாம் என 21% மானோரும், நண்பர்களுடன் சேர்ந்திருக்கவே பாடசாலை வருவதாக 24% பதிலளித்திருந்தனர். இவற்றின் அடிப்படையில் உயர்கல்வி இலட்சியம் மாணவர்களில் குறிப்பிடத்தக்க தொகையினரிடம் எதிர்மறையாகவே இருப்பது தெளிவாகின்றது. பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளின் அடிப்படையில் உயர்கல்வி பங்குபற்றுகை குறைவாக இருப்பதற்கான காரணங்களை பல்வேறு வகையில் பிரித்து நோக்கலாம்.

**மாணவர் சார்ந்த காரணிகள்**

மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இவற்றை நோக்குவோம்.

அட்டவணை 4

*மாணவர் சார்ந்த காரணிகள்*

| விடயம் | ஆம் எனப் பதிலளித்தோர்(%) | இல்லை எனப் பதிலளித்தோர்(%) |
|---|---|---|
| உமக்கு தெளிவான இலட்சியம் ஒன்று இருக்கிறதா? | 54 | 45 |
| கற்றலை மையப்படுத்தி உமது நேரத்தை திட்டமிட்டுள்ளீரா? | 43 | 57 |
| | 33 | 67 |
| போட்டி மிகுந்த உயர்தரப் பரீட்சையில் வெற்றி பெற கடினமாக முயற்சிக்கிறீரா? | 79 | 21 |
| | 23 | 77 |
| உமது பொழுதுபோக்கு நேரம் கற்றலை விட அதிகமானதா? | 53 | 46 |
| | 61 | 39 |
| உயர்கல்வி நிகழ்ச்சிகள் பற்றிய போதிய விளக்கம் உண்டா? | 52 | 48 |

மேலுள்ள தரவுகளின் அடிப்படையில் நோக்குகின்ற போது, 45% மாணவர்கள் தமக்கென தெளிவான இலட்சியம் எதுவும் கொண்டிராத நிலையில் இருக்கின்றனர். 57% மானோர் கற்றலுக்காக தமது நேரத்தை திட்டமிடாத நிலையில் உள்ளனர். அத்துடன கற்றலை விட பொழுது போக்கிற்காக அதிக நேரத்தை செலவிடும் மாணவர்களின் விகிதாசாரம் 79 ஆக உள்ளது. 61% விகிதமானோர் சமூக ஊடகங்களில் தமது நேரத்தை செலவிடுவோராய் உள்ளனர். உயர்கல்வி நிகழ்ச்சிகள் பற்றிய போதிய விளக்கம் பெற்ற மாணவர்கள் 23% மானோர் மாத்திரமே. 53% மாணவர்கள் தமது நண்பர்களின் சகவாசத்தால் கற்றல்

பாதிக்கப்படுவதாகக் கூறியுள்ளனர். உயர்கல்வியைத் தொடர்வோருடன் தொடர்புகளைப் பேணும், கலந்துரையாடும் 52% மான மாணவர்கள் உள்ளனர். அத்துடன் திறந்த கேள்விக்கு பதிலளிக்கையில், மனநெருக்கடி, போதைப்பொருள் பாவனை, ஸ்மாட் கையடக்கத் தொலைபேசிக்கு அடிமையாகி உள்ளமை, வீண் விடயங்களில் அதிக நேரம் செலவளிக்கும் பழக்கம் தொடர்கின்றமை என தனக்கு கற்க முடியாமல் இருப்பதற்கான பல்வேறு காரணங்களை மாணவர்கள் தாமாகவே முன்வைத்துள்ளனர்.

பெற்றோர் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில், உயர்தரம் கற்கும் மாணவர்களின் பொருளாதாரப் பங்களிப்பைப் பெறுவதாக 23% பெற்றோர் குறிப்பிட்டு இருப்பது, மாணவர்கள் பகுதி நேர வேலைகளில் ஈடுபடுகின்றனர் என்பதை எடுத்துக் காட்டுகின்றது.அத்துடன் 92% விகிதமான ஆசிரியர்கள் மாணவர்கள் கற்றலில் போதிய ஆர்வம் காட்டும் விடயத்தில் திருப்தியடையவில்லை. 93% மான ஆசிரியர்கள் மாணவர்களின் ஸ்மாட் கையடக்கத் தொலைபேசிப் பாவனை மாணவர்களின் கற்றலில் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்துவதாக கூறுகின்றனர்.அதிபர்களின் நேர்காணல் மற்றும் ஆசிரியர்களின் திறந்த வினாவுக்கான பதில்களில் மாணவர்களின் உயர்கல்விப் பிரவேசம் குறைவடைவதற்கான முக்கியக் காரணங்கள் என பின்வரும் விடயங்கள் முன்வைக்கப்பட்டன: பாடசாலைக்கு மாணவர்களின் வருகை குறைவாக உள்ளமை; மாணவர்கள் கல்வியின் பெறுமதியை உணராமை; வெளிநாட்டு மோகம்; உயர்கல்வி கற்பதால் காலம் வீணாகின்றது எனும் எண்ணம்; சமயப்பறறும் நற்பழக்கவழக்கங்களும் குறைவாக உள்ளமை; மாணவர்களிடம், உயர்கல்வியின் ஊடாகப் பெறக்கூடிய தொழிற்துறைகள் பற்றிய தெளிவின்மை காணப்படுகின்றமை; துரிதமாக, சொகுசு மற்றும் ஆடம்பர வாழ்க்கையை அடைய வேண்டும் எனும் மனப்பதிவு; நண்பர்களுடன் சேர்ந்து நேரம் வீணடிக்கும் கலாச்சாரத்தை மாணவர்கள் பின்பற்றுதல்; பிள்ளைகள் பெற்றோருக்கு கட்டுப்படாத தன்மை உருவாகியுள்ளமை; பணம் சம்பாதிப்பதற்காக மட்டும் என எதிர்காலத்தை நினைக்கின்றமை ஆகிய மாணவர்கள் சார்ந்த காரணிகள் பலவற்றை முன்வைத்துள்ளனர்.

**பாடசாலை சார்ந்த காரணிகள்**

பாடசாலையில் உயர்தர மாணவர்கள் கற்பதற்கான வசதிகள் காணப்படுவதாக 79% வீதமான மாணவர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர். 2 தேசிய பாடசாலைகளிலும் வசதிகள் போதியளவு காணப்படுவதை இது குறிக்கின்றது. ஆசிரியர்களைப் பொறுத்தவரை, 89% ஆசிரியர்கள் முதல்பட்டம் பெற்றவர்களாகவும், 54% பட்டபின் கல்வி டிப்ளோமாவை நிறைவு செய்தவர்களாகவும், 64% ஆசிரியர்கள் கற்பித்தலில் 3 வருடங்களுக்கு மேலான அனுபவத்தை உடையவர்களாகவும் உள்ளனர். ஆனால் மாகாண, வலய, பாடசாலை மட்டங்களில் உயர்தரத்தில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சிகளோ, இற்றைப்படுத்தல் நிகழ்ச்சிகளோ நடைபெறுவது மிக அரிதாகவுள்ளது என்பதை 64% ஆசிரியர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். 75% ஆசிரியர்கள் வாண்மைசார் திறன்களை விருத்தி செய்யும் எந்தப் பயிற்சி நெறியையும் தாம் தொடர்வதில்லை எனக்கூறியுள்ளனர். அதிபர்களின் நேர்காணலில் இருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில், உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கான ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் வளவாளர்களின் கிடைப்பிற்கிணங்க, அவ்வப்போது நடைபெறுவதாக குறிப்பிடப்பட்டது. திட்டமிட்ட அடிப்படையில் அவை நடைபெறாமையை அது குறிப்பிடுகின்றது. பாடசாலைக் கலாச்சாரம் மாணவர்களின் கற்றலில் தாக்கம் செலுத்துவதாக 96% ஆசிரியர்கள்

கூறியுள்ளனர். கற்றல் கலாச்சாரம் இன்னும் மேம்படுத்தப்பட வேண்டும் என்பதையே இது குறித்துக்காட்டுகின்றது.

அட்டவணை 5
*பாடசாலை சார்ந்த காரணிகள்*

| விடயம் | ஆம் எனப் பதிலளித்தோர் % | இல்லை எனப் பதிலளித்தோர் % |
|---|---|---|
| உயர்தர மாணவர்கள் கற்பதற்கான வசதிகள் காணப்படுதல் | 79 | 21 |
| ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் இற்றைப்படுத்தல் நிகழ்ச்சிகள் நடைபெறுவது போதுமாகவுள்ளது | 36 | 64 |
| ஆசிரியர்கள் வாண்மைசார் திறன்களை விருத்தி செய்யும் பயிற்சி நெறிகளை தொடர்வது தொடர்பாக | 25 | 75 |
| பாடசாலைக் கலாசாரம் மாணவர்களின் கற்றலில் தாக்கம் செலுத்துவதாக ஆசிரியர்கள் கருதுவது தொடர்பாக | 96 | 04 |

**குடும்பம் சார்ந்த காரணிகள்**

மாணவர்களின் பெற்றோருக்கு வழங்கப்பட்ட வினாக்கொத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களை பின்வருமாறு நோக்கலாம்.

அட்டவணை 6
*குடும்பம் சார்ந்த காரணிகள்*

| விடயம் | ஆம் எனப் பதிலளித்தோர்(%) | இல்லை எனப் பதிலளித்தோர்(%) |
|---|---|---|
| கல்விக்காக செலவளிக்கும் வசதி காணப்படுதல் | 54 | 46 |
| தந்தையர்கள் உயர்கல்வி பெற்றவர்களாகக் காணப்படுதல் | 07 | 93 |

| | | |
|---|---|---|
| தய்மார்கள் உயர்கல்வி பெற்றவர்களாகக் காணப்படுதல் | 17 | 83 |
| உயர்கல்வித் துறைகள் பற்றிய அறிவு காணப்படுதல் | 45 | 55 |

மேற்கண்ட அட்டவணையின்படி, 54% விகிதமானோர் மட்டுமே கல்விக்காகச் செலவளிக்கும் வசதியுடையோர் என அறிய முடிகின்றது. நகர்ப்புறத்தில் வசிக்கும் பெற்றோர், வசதியுள்ளது என ஏற்றுக்கொள்ளும் அதேவேளை, கிராமப்புற பெற்றோர் வருமானம் கல்விக்குச் செலவளிக்கும் அளவிற்குப் போதியதல்ல எனக் கூறுவதும் அவதானிக்கத்தக்கது. 93% மான தந்தையர்கள் உயர்கல்வியைப் பெறாதோர். 83% மான தாய்மார்களும் உயர்கல்வியைப் பெறாதவர்கள். கல்வி கற்ற குடும்பப் பின்னணி இல்லாத நிலைமை காணப்படுவது அவதானிக்கத்தக்க அம்சமாகும். தமது பிள்ளைகளுக்குத் தொடர முடியுமாக உள்ள உயர்கல்வித் துறைகள் பற்றிய தெளிவு இல்லாதவர்களாக 55% பெற்றோர் காணப்படுகின்றனர். ஆசிரியர்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில், 96% ஆசிரியர்கள், மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் பெற்றோர் வழங்கும் ஆதரவும் ஒத்துழைப்பும் போதுமானதல்ல எனத் தெரிவித்துள்ளமை நோக்கத்தக்கது. மேலும் குடும்பத் தொழிலை மகனும் தொடர வேண்டும் எனும் மனப்பான்மை வீட்டில் ஓங்கியிருப்பதும், கல்விக்கு முக்கியத்துவம் வழங்காத வீட்டுச் சூழல் காணப்படுவதும் கற்பதில் உள்ள ஆர்வத்தை மாணவர்கள் இழந்து விடுவதற்கான காரணங்களாகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. குடும்பங்களில் ஆண்பிள்ளைகளுக்கு அளவுக்கு மிஞ்சிய சுதந்திரம் கொடுக்கும் நிலை காணப்படுவதால், மாணவர்கள் கல்வியில் இருந்து விலகிச் செல்கின்றனர் என்பதும் ஆசிரியர்களால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களாகும்.

**ஏனைய காரணிகள்**

சமூக ஊடகங்களின் தாக்கம்:- 3 தரப்பினரிடம் இருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளில் 75% ஐ விட அதிகமான தரவுகள், மாணவர்கள் சமூக ஊடகங்களுடன் அதிக நேரத்தை செலவிடுவோராய் உள்ளனர் என்பதை தெளிவாகக் கூறுகின்றன. சமூக ரீதியான வழிகாட்டல்களின் போதாமை:- சமூக ரீதியாக மாணவர்களுக்கு வழங்கப்படும் வழிகாட்டல்கள் மிகக் குறைவானதாகும் என 56%மான பெற்றோர் குறிப்பிட்டுள்ளனர். இப்பகுப்பாய்வின் அடிப்படையில், மாணவர்களின் உயர்கல்வி பங்குபற்றுகை குறைவாக இருப்பதில் பல்வேறு காரணிகள் தாக்கம் செலுத்துவதை அறிய முடிகின்றது.

**கண்டுபிடிப்புக்கள்**

இவ்வாய்வின் முக்கியக் கண்டுபிடிப்புக்களாகப் பின்வருவனவற்றை வகைப்படுத்திக் கூற முடியும். முஸ்லிம் ஆண் மாணவர்களின் உயர்கல்வி பங்குபற்றுகை தொடர்பாக: 2015-2018 வரையான காலப்பகுதியில் பாடசாலைகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில், முஸ்லிம் ஆண் மாணவர்களின் உயர்கல்வி பங்குபற்றுகை (6.4%) குறைவாக உள்ளமை உறுதியாகிறது. உயர் கல்வியைத் தொடர்வது பற்றிய மாணவர்களின் புலக்காட்சி தொடர்பாக: உயர் கல்வி தொடர்பான எதிர்மறை மனப்பாங்குடன் மாணவர்களில்

பெரும்பான்மையானோர் காணப்படுகின்றனர். உயர்கல்விக்கு தான் தெரிவு செய்யப்படுவது தொடர்பில் 65% மான மாணவர்கள் தன்னம்பிக்கை அற்றவர்களாக உள்ளனர். 63% மானோர் உயர்தரப் பரீட்சை எழுதிய பின்னர், உழைப்பில் ஈடுபட வேண்டும் என்ற மனநிலையில் உள்ளனர். மாணவர்களின் உயர்கல்வி பங்குபற்றுகை குறைவாக இருப்பதில் தாக்கம் செலுத்தும் பல்வேறு காரணிகள் தொடர்பாக பின்வருவனவற்றைக் கூற முடியும்:

மாணவர் சார்ந்த காரணிகள்

1. 73% மாணவர்கள் உயர்கல்வி நிகழ்ச்சிகள் பற்றிய போதிய விளக்கம் அற்றவர்களாக உள்ளனர்.
2. மாணவர்கள் நேரத்தினை திட்டமிடாதோராகவும், பொழுதுபோக்கிற்கு அதிக நேரத்தை செலவிடுவோராயும் உள்ளனர்.
3. நண்பர்களின் தொடர்புகள் மாணவர்களின் கற்றலைப் பாதிப்படையச் செய்கின்றது.

குடும்பம் சார்ந்த காரணிகள்

1. பெற்றோரின் கல்வி நிலை மாணவர்களின் உயர்கல்வி தொடர்கையில் தாக்கம் செலுத்துகின்றது.
2. உயர்கல்வி நிகழ்ச்சிகள் மற்றும் வாய்ப்புக்கள் பற்றி பெற்றோர்கள் கொண்டுள்ள அறிவு, குறைவாகக் காணப்படுவதும் மாணவர்களின் கல்வியில் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது.
3. மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் பெற்றோர் வழங்கும் ஆதரவும் ஒத்துழைப்பும் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது.
4. ஆண் பிள்ளைகள் குடும்பத்தொழிலைத் தொடர வேண்டும் என்ற மனப்பாங்கு குடும்பத்தில் நிலவுகின்றது.
5. கல்விக்கு முக்கியத்துவம் வழங்கப்படாத வீட்டுச் சூழல் காணப்படுகின்றது.

பாடசாலை சாரந்த காரணிகள்

1. ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்கும், இற்றைப் படுத்துவதற்கும் உரிய பயிற்சிகள் மிகவும் குறைவாகவே வழங்கப்படுகின்றது.
2. கற்றலில் மாணவர்களை ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் பாடசாலையில் குறைவாகவே நடாத்தப்படுகின்றன.
3. பாடசாலையில் கற்றலை நேசிக்கக்கூடிய கலாச்சாரம் காணப்படுவதில்லை.

ஏனைய காரணிகள்

1. சமூக ஊடகங்களின் தாக்கம் மாணவர்களின் யதார்த்த உலகை பாதித்து வருகிறது.
2. மாணவர்களின் உயர்கல்வி எழுச்சிக்குச் சமூக ரீதியான, பங்களிப்புக்கள், வழிகாட்டல்கள் குறைவாக உள்ளது.
3. மாணவர்களிடத்தில் சமூகப்பற்றுக் குறைவாகக் காணப்படுகின்றது. உயர்கல்வி தொடர்கையால் ஏற்படக்கூடிய சமூக நன்மைகள் பற்றிய அவசியத்தை மாணவர்கள் உணராது உள்ளனர்.

**விதந்துரையும் முடிவுரையும்**

உயர்கல்வியைப் பெறுவதால் சிறந்த எதிர்காலம் ஒன்றினை அடைந்துகொள்ளலாம் எனும் நேர்மனப்பாங்கு மாணவர்களிடத்தில் இல்லை. ஆனால் துரிதமாக உழைக்க வேண்டும் என்ற மனநிலை ஆண் மாணவர்களிடத்தில் உருவாகியுள்ளது. உயர்கல்வியைத் தொடர்தற்கான வாய்ப்புக்கள் தமக்குக் கிடைக்காது என்ற மனநிலையில், தன்னம்பிக்கை அற்றவர்களாக மாணவர்கள் உள்ளனர். உயர்கல்வியின் நிலையான பயன்கள் பற்றியும், தன்னால் முடியும் எனும் நம்பிக்கையை மாணவர்களிடத்தில் கட்டிஎழுப்புவது தொடர்பானதுமான நிகழ்ச்சித் திட்டங்களைப் பல்வேறு மட்டங்களிலும் தொடராக நடாத்துதல் வேண்டும். மாணவர் சார்ந்த காரணிகள் தொடர்பாக நோக்கும் போது உயர்கல்வி நிகழ்ச்சிகள் பற்றிய போதிய தெளிவினை, உயர்தரப் பாடத்தெரிவு மற்றும் கற்றலை ஆரம்பித்தலின்போதும், அவசியப்படும் ஏனைய சந்தர்ப்பங்களிலும் துறைசார்ந்தவர்களால் வழங்குவதற்குப் பாடசாலைகள் ஆவன செய்ய வேண்டும். நேரத்தை கற்றலுக்கு முன்னுரிமை வழங்கி திட்டமிடுவதற்கும், நண்பர்களோடுள்ள தொடர்புகளில் வரையரைகளைப் பேணி நடந்துகொள்வதற்கும் பெற்றோர் பக்கபலமாக இருக்கும் வகையில் அவர்களை வலுவூட்ட வேண்டும். குடும்பம் சார்ந்த காரணிகள் தொடர்பாக நோக்கும் போது, பெற்றோர்களாக வாழும் தலைமுறையினர் கல்வியில் நலிவுற்றிருப்பதன் விளைவு இன்றைய இளைய தலைமுறையின் கற்றல் வாய்ப்புக்களும் தவறவிடப்படும் நிலை உருவாகியுள்ள நிலைமையில், உயர்கல்வியின் இன்றியமையாமை பற்றி பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட வேண்டும். வீட்டுச் சூழலைக் கற்றலை மேம்படுத்தும் சூழலாக மாற்றவும், தொழிலை விடுத்து உயர்கல்வியை முன்னுரிமைப்படுத்தும் கலாச்சாரத்தைச் சமூகத்தில் கட்டியெழுப்பவும் சமூக மட்டத்திலும், பாடசாலை மட்டத்திலும் பெற்றோர்களை இலக்குவைத்து வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். பாடசாலை சார்ந்த காரணிகள் தொடர்பாக நோக்கும் போது, கற்றல் கற்பித்தலின் பக்கம் மாணவர்களின் கவனத்தை ஈர்க்கவும், மாணவர்களை இயல்பாகவே கற்றலில் ஈடுபடுத்தவும் உயர்தரத்திற்கு ஆசிரியர்கள் வலுவூட்டப்பட வேண்டும். மாணவர்களைச் சாதனையாளர்களாக மாற்றும் நோக்கில் தன்னம்பிக்கையை மேம்படுத்தும் வகையில் விஷேட நிகழ்ச்சிகள் வடிவமைக்கப்பட வேண்டும். உயர்தரத்தில் கற்றலில் ஆர்வமாய் ஈடுபடும் கலாச்சாரம் ஒன்று கட்டியெழுப்பப்படல் குறிப்பாக முஸ்லிம் பாடசாலைகளின் தேவையாக உள்ளது. இவற்றைப் பாடசாலை நிர்வாகம் கருத்தில் எடுத்து காரியமாற்றுதல் அவசியமாக உள்ளது. ஏனைய காரணிகள் தொடர்பாக நோக்கும் போது, மாணவர்களின் சமூகப்பற்றை அதிகரிக்க, பெற்றோரும், பாடசாலையும் மாணவர்களை கண்காணிப்புடன் சமூகப் பணிகளில் ஈடுபடுத்த வேண்டும். சமூக மட்டத்தில் உயர்தர மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்குச் சமூக நிறுவனங்கள் பங்களிப்புச் செய்தல் அவசியமாகும். சமூக ஊடகங்களின் பாதிப்புக்கள் பற்றி மாணவர்கள் அறிவூட்டப்படுவதுடன், அவற்றை வரையரைகளுடன் கையாள்வதற்கான வழிகாட்டல்களும் வழங்கப்பட வேண்டும். இவ்வாறு உயர்கல்வியைத் தொடரும் ஆண் மாணவர்களின் விகிதாசாரம் பாரிய வீழ்ச்சியை எதிர்நோக்கியிருக்கும் இக்காலகட்டத்தில், இதற்கான காரணங்கள் ஆய்வின் ஊடாகக் கண்டறியப்பட்டுள்ள நிலையில், இப்பிரச்சினைகளை இழிவளவாக்குவதற்குப் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் அவசியமாகும். உயர்தரத்தில் கற்கும் மாணவர்களை உயர்கல்வியின் பால் நகர்த்துவதற்கு, மாணவர்கள் முறையாக வழிநடத்தப்படுவதற்குப் பலரும் பொறுப்பாளர்களாக செயற்பட வேண்டிய நிலையில் உள்ளனர். பெற்றோரும் பாடசாலையும் சமூகமும் இது தொடர்பில் துரிதமாக, தொடரான நடவடிக்கைகளை மேற்கொள்வது பயனுள்ளதாக அமையும்.

**துணை நூற்பட்டியல்:**


1. Saibutheen. N.B.M.,Hasbulllah. S.H., (2000) *Higher Education of Muslims: A Background report (முஸ்லிம்களின் உயர்கல்வி: ஒரு பின்னணி அறிக்கை.),* S.H Hasbullah and M.P.M. Saibudeen, (eds), (2000). Muslim Education in Sri Lanka: Women's Education and Higher Education (இலங்கை முஸ்லிம் கல்வி: பெண் கல்வியும் உயர்கல்வியும்). Proceedings of the National Conference on Muslim Education in Sri Lanka (2000). Muslim Women's Research and Action Forum. Colombo. . ISBN 955-625 010-7
2. Nisha.I., Hasbullah. S.H., (2000) *Education of Muslim Women; A Background Report (முஸ்லிம் பெண்களின் கல்வி நிலை: ஒரு பின்னணி அறிக்கை.)* S.H Hasbullah and M.P.M. Saibudeen, (eds), (2000). Muslim Education in Sri Lanka: Women's Education and Higher Education (இலங்கை முஸ்லிம் கல்வி: பெண் கல்வியும் உயர்கல்வியும்). Proceedings of the National Conference on Muslim Education in Sri Lanka (Pages 3-23). Muslim Women's Research and Action Forum. Colombo. . ISBN 955-625 010-7
3. Nawastheen, F. M. (2019). Educational and curriculum changes in Sri Lanka: In light of literature. *Muallim Journal of Social Science and Humanities, 3*(3), 342-361. https://doi.org/10.33306/mjssh/26
4. Ahamedlebbe.S.M. (2011). Gender Imbalances in University Admission in Sri Lanka *Journal of Management, VII*(1), 24-35. http://www.seu.ac.lk/researchandpublications/fmc_journal/jmvii/Gender%20Imbalances%20in%20University.pdf
5. Morley, L., & Lussier, K. (2009). Intersecting poverty and participation in higher education in Ghana and Tanzania. *International Studies in Sociology of Education, 19*(2), 71–85. doi:10.1080/09620210903257158
6. Zulfika. P. (2000). Higher Education of Muslim women *(முஸ்லிம் பெண்களின் உயர் கல்வி)* S.H Hasbullah and M.P.M. Saibudeen, (eds), (2000). Muslim Education in Sri Lanka: Women's Education and Higher Education (இலங்கை முஸ்லிம் கல்வி: பெண் கல்வியும் உயர்கல்வியும்). Proceedings of the National Conference on Muslim Education in Sri Lanka (Pages 39-60). Muslim Women's Research and Action Forum. Colombo. ISBN 955-625 010-7
7. Karunanithi.M. (2000). *Outcomes of General Education of Muslim Schools - An assessment (முஸ்லிம் பாடசாலைகளின் பொதுக்கல்விப் பெறுபேறுகள்: ஓர் அளவீடு).* S.H Hasbullah and M.P.M. Saibudeen, (eds), (2000). Muslim Education in Sri Lanka: Women's Education and Higher Education (இலங்கை முஸ்லிம் கல்வி: பெண் கல்வியும் உயர்கல்வியும்). Proceedings of the National Conference on Muslim Education in Sri Lanka (Pages 110-124). Muslim Women's Research and Action Forum. Colombo. ISBN 955-625 010-7
8. Santhirasekeran. S. (2000). *University education of Muslims (முஸ்லிம்களின் பல்கலைக்கழகக் கல்வி)* எஸ்.எச்.ஹஸ்புல்லாஹ், மற்றும் என்.பி.எம்.சைபுதீன் (பதிப்பாசிரியர்கள்). S.H Hasbullah and M.P.M. Saibudeen, (eds), (2000). Muslim Education in Sri Lanka: Women's Education and Higher Education (இலங்கை முஸ்லிம் கல்வி: பெண் கல்வியும் உயர்கல்வியும்). Proceedings of the National Conference on Muslim Education in Sri Lanka (Pages 136-159). Muslim Women's Research and Action Forum. Colombo. ISBN 955-625 010-7

9. Riaz. M, Pervaiz. A. M. H. & Aleem. M. (2015). A comparative study of the factors affecting the male and female students' academic performance in higher education (a case of government college university, lahore). *European Scientific Journal, 11*(7): 429-436
10. Rauf Zain (2016). *Contemporary Sri Lankan Muslims* (*சமகால இலங்கை முஸ்லிம்கள்*). கொழும்பு.
11. Jalaldeen, M. S. M. (2011). Challenges and Issues of Contemporary Sri Lankan Muslim Education with Special Reference to Ampara District Muslim Education, 1st International Symposium held on 19 - 21 April, 2011 at South Eastern University of Sri Lanka. http://ir.lib.seu.ac.lk/handle/123456789/1091
12. John T. E. Richardson & Estelle King (2010). Gender Differences in the Experience of Higher Education: quantitative and qualitative approaches, Educational Psychology, 11:3-4, 363-382, DOI: 10.1080/0144341910110311
13. Richardson, J. T. E., Mittelmeier, J., & Rienties, B. (2020). The role of gender, social class and ethnicity in participation and academic attainment in UK higher education: an update. *Oxford Review of Education*, 1–17. doi:10.1080/03054985.2019.1702012
14. Crawford, C., & E. Greaves, (2015). *Socio-Economic, Ethnic and Gender Differences in HE Participation, BIS Research Paper no. 186.* London: Department for Business Innovation & Skills.
15. Abdulla, F. & Ridge, N. (2011), *"Where are all the men? Gender, participation and higher education in the United Arab Emirates*", working paper series no. 11-03, Dubai School of Government.www.dsg.ae/en/publication/Description.aspx?Pubid=228&primenuid=11&mnu=Pi